# NAMATHU EELANADU E-PAPER-FEBRUARY-2025



# ????? ??????????? ?????????
# ?????? ??????????????? ??????????





தமிழ் ஊடகப்பரப்பின் மூத்த ஒலிபரப்பாளரும் ஊடகருமான ஆனந்தி சூரியப்பிரகாசம் லண்டனில் நேற்று(21) காலமானார்.

யாழ்ப்பாணம் – சாவகச்சேரியைச் சேர்ந்த இவர் இலங்கை வானொலியில் தயாரிப்பாளராக பணிபுரிந்த காலத்தில் பல வானொலி நாடகங்களில் நடித்த அறிவிப்பாளராகவும் பணிபுரிந்திருந்தார்.
அதன்பின்னர் 1970களில் இலங்கையில் இருந்து பிரித்தானியாவுக்கு புலம்பெயர்ந்த அவர் பிபிசி தமிழோசையில் பகுதிநேர அறிவிப்பாளராக பணியாற்ற ஆரம்பித்து ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்கு மேலாக அங்கு நிரந்தர அறிவிப்பாளராக மூத்த தயாரிப்பாளராக பணியாற்றி 2005இல் ஓய்வு பெற்றார்.

அதன்பின்னர் சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியம் உருவாக்கப்பட்ட நிலையில் தனது மறைவுவரை அதன் தலைமை பொறுப்பில் இருந்தார்.

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக பி. பி. சி தமிழோசையில் மூத்த தயாரிப்பாளராக பணிபுரிந்த ஆனந்தி சூரியப்பிரகாசம் தேசியத்தலைவர் மேதகு வே. புpரபாகரனை செவ்விகண்ட பெருமைக்குரியவர்.

இவர் தயாரித்த பல ஒலிபரப்புத் தொடர்களும் முக்கிய பிரபலங்களுடனான செவ்விகளும் இவரை உலகப்பரப்பெங்கும் வாழ்ந்த தமிழ்மக்களிடையே பிரபலமாக்கியிருந்தன.

ஆனந்தி சூரியபிரகாசத்தின் மறைவுக்கு நமது ஈழநாடு ஆழ்ந்த இரங்கல்களையும் அஞ்சலிகளையும் தெரிவித்துக்கொள்கிறது.

---

# ’’????????? 4, ????????? ????????? ?????? ????? ????? ???????? ???????????? ! ….”






## -??????????????

ஈழத்தமிழ்த் தேசிய இனத்தின் இறைமை மறுக்கப்பட்ட நாள் பெப்ரவரி நான்கு.

எமை ஆண்ட ஏகாதிபத்தியவாதிகளாலும், வலதுசாரி தமிழ்த்தேசிய அரசியல் கனவான்களாலும் சிங்கள தேசத்திடம் தமிழ் இறைமை ஒப்படைக்கப்பட்ட நாள்.

அன்று தொடங்கிய தமிழின அடியழிப்பு, முள்ளிவாய்க்காலில் பேரழிவாக விஸ்வரூபமெடுத்தது. இந்திய ஒன்றிய அரசாங்கங்களும் அதன் ஆளும் வர்க்கமும், உலக ஏகாபத்தியங்களும் தமக்குள் பிரிந்து கிடந்தாலும், சில தளங்களில் ஒன்றுபட்டு நின்றாலும், எமக்கு நடந்த இனப்படுகொலை குறித்து வாய் திறக்க மறுக்கின்றன.

இதற்குள் சுழியோடி எமக்கான நீதியை, சுயநிர்ணய உரிமையை பெறலாம் என்கிற கற்பிதம் கடந்த 15 வருடங்களாக எம்மவரிடையே விதைக்கப்படுகிறது.

சந்திப்புக்களும் சமூக வலைத்தளக் கூட்டங்களும் தொடர்ந்தவண்ணமுள்ளது. கட்சிகளுக்கு அப்பாற்பட்ட மக்கள் இயக்கமொன்றின் அவசியம் குறித்து, ஒவ்வொரு தேர்தலின் பின்பும் பேசப்படுகிறது.

கட்சி மற்றும் அதிகார அரசியல் ஆக்கிரமித்திருக்கும் தமிழ்த்தேசிய தளத்தில், மக்கள் திரள் அரசியல் பற்றிப் பேசுவதை எவரும் கவனிப்பதில்லை. கட்சி அரசியல், தமிழ்நாட்டு அரசியல் கடந்து, புதிய தளத்தில் எப்போது சிந்திக்கப் போகிறோம்?. ‘பெப்ரவரி 4, ஒவ்வொரு வருடமும் வரும். நாம் என்ன செய்யப் போகிறோம்?.

---

## ????????????? ?????????? ????????? ??????????? ???????????????????????? ???????????? ?????????????




தமிழீழமே எமது நாடு. தமிழீழம் ஒன்றே எமது தீர்வு என்ற கோசத்துடன் பிரித்தானியாவில் உள்ள இலங்கை தூதரகத்தின் முன் ஒன்று திரண்ட புலம்பெயர் தமிழர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கையின் தேசிய சுதந்திர தினமான இன்று (4) அதனை கரிநாளாக பிரகடணப்படுத்தி தமிழர் தாயகம் உட்பட உலகெங்கிலுமுள்ள தமிழர்கள் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்திவருகின்றனர்.

அந்தவகையில் இன்று பிரித்தானியாவிலுள்ள இலங்கை தூதரகத்தின் முன் ஒன்று திரண்ட பெருமளவிலான புலம்பெயர் தமிழர்கள் இலங்கையின் சுதந்திர தின கொண்டாட்டத்திற்கு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியதுடன் தமிழீழமே எமது நாடு தமிழ் ஈழம் ஒன்றே எமது தீர்வு என்ற கோசங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.


Sri Lanka's Inde Day
is a Black Da amils








Not just


Tamil Eelam is the only solution
SRI LANKA GENOCIDAL STATE


End
Sri Lankan
occupation
-free Tamileelam.
United Kingdom,
fulfill your duty
- support a free
Tamileelam.
GANT



# [illegible]!







சுதந்திர தினத்தினை (04.02.2025) கரிநாளாக பிரகடனப்படுத்தி யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுப்பட்டனர். இதன்போது, பிரதான கொடி கம்பத்தில் பறந்த தேசிய கொடி மாணவர்களால் இறக்கப்பட்டு கறுப்புக் கொடியேற்றப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக பிரதான வாயிலின் முன்பாக இன்றையதினம் காலை 11 மணியளவில் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதேவேளை பல்கலைகழக சூழலில் கறுப்புக் கொடிகளும் பறக்க விடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ???????? ??????? ???????? ???????????????? ??????? ????? ??????? ?????????? ??????? ??????????




பல்வேறு அழுத்தங்களுக்குஅச்சுறுத்தல்களுக்கு மத்தியில் இலங்கையின் தேசிய சுதந்திர தினத்தினை கரிநாளாக பிரகடனப்படுத்தி வடகிழக்கு மாகாண வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளினால் இன்று போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

ஆந்தவகையில் கிழக்கு மாகாண வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினால் மாபெரும் கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்று இன்று மட்டக்களப்பு செங்கலடி பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

செங்கலடி சித்திவிநாயகர் ஆலயத்திற்கு முன்பாக இந்த போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு கொம்மாதுறை பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக சென்றடைந்ததும் அங்கும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதில் மட்டக்களப்பு,அம்பாறை,திருகோணமலை மாவட்டங்களை சேர்ந்த வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தினரும் கலந்து கொண்டனர்.

இதன்போது 'இலங்கையின் சுதந்திர தினம் எங்களுக்கு கரிநாள்' 'நீங்கள் சுதந்திரம் அனுபவிக்கும்போது நாங்கள் ஒடுக்கப்படுவதா' 'உங்களுக்கு சுதந்திரநாள் எங்களுக்கு திண்டாட்ட நாள்' 'காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் எங்கே' 'எமது மேய்ச்சல் தரை எமக்கு வேண்டும்' 'நிம்மதியில்லாத நாட்டில் சுதந்திரம் எதற்கு' 'சுதந்திரம் இல்லாத நாட்டில் சுதந்திர தினம் எதற்கு' 'எங்கே எங்கே உறவுகள் எங்கே' உட்பட பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில் வலிந்துகாணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் மூன்று மாவட்ட தலைவிகள் மற்றும் உறவினர்கள்இஇலங்கை தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினரும் கட்சியின் பாராளுமன்றகுழு பேச்சாளருமான

ஞா.சிறிநேசன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள்இபொதுமக்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

இலங்கையின் தேசிய சுதந்திர தினத்தினை வடகிழக்கு தமிழர்கள் கரிநாளாக அனுஸ்டிக்கும் வகையில் விடுக்கப்பட்டவேண்டுகோளின் அடிப்படையில் மட்டக்களப்பு நகரில் இந்தபோராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனினும் மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகத்தினால் நீதிமன்றத்தின் ஊடாக தடையுத்தர பெறப்பட்ட நிலையில் இந்த போராட்டம் செங்கலடியில் நடாத்தப்பட்டது.







SINGER
CULTURE OF IMPUNITY
MUST END
HOW DID THE CHILDREN
WHO TRUSTED YOUR ARMY
AND SURRENDERED
DISAPPEAR?
E WON'T BELIEVE
SRI LANKA,
INTERNATIONAL INQUIRY
Political solutions


உலகிலேயே அதிகமாகக் காணாமல்
சம்பவங்களை கொண்ட
one of the countries
most enforced
Refer Sri Lanka Situation to


OMP
ஒரு கண்துடைப்பு
நாடகம் !


CULTURE OF IMPUNITY
MUST END
ct all Political solutions
unitary state constitution


CULTURE OF IMPUNITY
MUST END
பிள்ளைகளை தினம்
தேடிக்கொண்டே நீதியின்றியே
இறந்துகொண்டிருக்கின்றோம்.
HOW DID THE CHILDREN
WHO TRUSTED YOUR ARMY
AND SURRENDERED
DISAPPEAR?








Sri Lanka's
Black day for Tamil


இலங்கையின் சுதந்திர நாள்
Sri Lanka's independence day
Black day for Tamil Homeland.


AJ
ALUMEX
இலங்கையின் சுதந்திர நாள்
தமிழர் தாயகத்தின் கரிநாள்
தமிழினப்படுகொலைக்கு சர்வதேச நீதி விசாரணை வேண்டும்.
Sri Lanka's independence day
Black day for Tamil Homeland.
we want international investigation into the Tamil Genocide


MIHIRANGA
இலங்கையின் சுதந்திர நாள்
Sri Lanka's independence day


CULTURE OF
MUST END
காணாமல் போனவர்களின்
குடும்பங்களை
மிரட்டுவதையும்
அச்சுறுத்துவதையும்
நிறுத்துங்கள் !
THERE SHOULD BE A PROPER INTERNATIONAL
INVESTIGATION WITHOUT PROLONGING
PERIOD OF TIME.



புரியாத புதிராக எனது நீதித்துறை வாழ்க்கை முடிவுறுகிறது என வவுனியா மேல் நீதிமன்ற முன்னாள் நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆதங்கத்துடன் தெரிவித்துள்ளார்.

வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதியில் இன்று(01.02) இடம்பெற்ற கௌரவிப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் 4 வெற்றிடங்கள் உள்ளன. 12.01.2025 இல் இருந்து அதற்கு தகமையானவன் நான். நான் தகமையாலும், இலக்கம் 1 இன்றில் இருப்பதாலும் நான் தகுதியானவன். எனது பிறந்த தினம் 20.01 ஆகும். மேல் நீதிமன்றம் 61 வயதை அடையும் போது முதல்நிலை நீதின்றம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

காலத்தின் சோதனை, முடிவு இறுதிப்படுத்தப்படவில்லை எனவும் கூறுகிறார்கள். இறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும் கூறுகிறார்கள். 28 ஆண்டுகள் கடமை புரிந்தேன். புரியாத புதிராக எனது நீதித்துறை வாழ்க்கை முடிவுகிறது. வேதனையா, சோதனையா, சாதனையா எதுவும் புரியவில்லை.

அனைத்தும் நல்லதிற்கே என மனதை திருப்திப்படுத்தக் கூட முடியவில்லை. ஆனால் இன்று பெருவிழாவை வவுனியா சட்டத்தரணிகள் சங்கம் ஒழுங்கமைத்து வடக்கு – கிழக்கு நீதிபதிகள், சட்டத்தரணிகள் இங்கு வருகை தந்ததையிட்டு உங்கள் நன்றி உணர்வை மதிக்கிறேன்.

நீங்கள் அருகில் நிற்கும் போது எனக்கு புத்துணர்வு வருகிறது. இன்னும் சாதிக்க வேண்டும். சாதனைகள் புரிய வேண்டு என்ற உணர்வு உள்ளுணர்வாக கிளம்புகின்றது. இருப்பினும், சந்தோசமாக போவதற்கு நான் தயார்” எனத் தெரிவித்துள்ளார்.